முரசொலி

ஆசிரியர்: மு. கருணாநிதி

முரசு: 6 | 11–9–5௯ | வெள்ளி | ஒலி: 21

'பஞ்ச(ர்) சீலம்!'

சமீபத்திய இந்திய–சீன எல்லைத் தகராறு பண்டிதரின் பஞ்சசீலக் கொள்கையின் தோல்வியைக் காட்டுகிறது.

தி. மு. க: என்னப்பா காங்கிரஸ்? என்ன, முகத்தில் ஒரே களிப்பு தாண்டவமாடுகிறது?

காங்கிரஸ்; களிப்புத்தானப்பா: எக்களிப்பு! புதுவையிலே புதுமையான வெற்றி. கம்யூனிஸ்டுகளின் தலைக்கனம் குறைய, நல்ல 'கன அடி' தந்து, உங்கள் கழகத்திற்குக் குழி தோண்டி வெற்றி கண்டோம்.

தி. மு. க; ஏப்பா, என்ன உங்கள் வெற்றி ஒரே 'கலவர வெற்றி' யாக இருக்கிறதே! ஒழுங்காக முறையாக வெற்றி கிடைக்கவில்லை போலிருக்கிறதே?

காங்: நீ அடிபட்ட வேகத்தில் புலம்புகிறாய்; உன் கழகம் மாண்டுவிட்ட சேதி கேட்டு இப்படி ஒப்பாரி வைக்கிறாய்! கருமாதி உன் மூளையைக் கலக்கிவிட்டது!

தி. மு. க: தவறு தம்பி, தவறு! கருமாதி என் மூளையைக் கலக்கவில்லை; உன் மூளை கலங்கியதால்தான் இப்படிக் கருமாதி என்றெல்லாம் உளறுகிறாய் ஒரு கட்சி சில தொகுதிகளில் தோற்றவுடன் கருமாதியென்றால், நீங்கள் எத்தனை கருமாதிகளை நடத்தியிருக்கிறீர்கள், இதுவரை? பன்னிரெண்டு ஆண்டுகளாக எத்தனை பிணங்களை உங்கள் நடுவீட்டில் போட்டு ஒப்பாரி வைத்திருக்கிறாய்? எத்தனை தடவை உங்கள் தாலியறுந்திருக்கிறது?

காங்: எப்படியோ வெற்றிமாலை எங்களுக்கு! தோல்வி....

தி. மு. க: எங்களுக்கிருக்கலாம்! பதினோராயிரம் ஓட்டுகள் பெற்றோம். என்றால் அது நாங்களே விதைத்துக் காத்து அறுத்த பயிர்! முன்பு இல்லாத ஒன்றைப் பெற்றிருக்கிறோம்!

காங்: நாங்கள்தான் என்ன...?

தி. மு. க: நீங்கள் எங்களுக்கு முரண்பாடு. கம்யூனிஸ்ட்டுகளுக்கு அதிக இடத்தைத் தந்து விட்டு வந்திருக்கிறீர்கள்; மெஜாரிட்டியாக நீங்கள் இருந்தாலும், அது உங்கள் கட்சிக்குக் கிடைத்த ஓட்டு அல்ல! காமராசருக்குக் கிடைத்த ஓட்டு! காமராசர்

கொள்ளை வட எல்லையிலே; கொண்டாட்டம் ஒரு கேடா?

என்றால் அவருக்கு அல்ல; அவருடைய சொல்லுக்கு! "புதுவையில் கள்ளுக் கடையை மூடமாட்டோம் தேர்தல் வரைக்குமாவது காந்தீயத்தைக் கழுத்தறுத்து வேலிக் கடியில் வீசத் தயார்!"—என்று காமராசர் பேசிய பேச்சுக்குக் கிடைத்த ஓட்டுகள்தான்!

காங்: நீ ஆயிரம் சொல்லு. அதைப்பற்றிக் கவலையில்லை. காங்கிரஸ் நல்ல பாதையில் செல்கிறது. பலமுள்ள அரசாட்சியை அமைத்து வருகிறது.

தி. மு. க: ஆமாம்! ஆமாம்! அமைத்துத்தான் பார்க்கிறது! ஆனால் இன்னும் அப்படி அமையவில்லை!

காங்: ஏன் அமையவில்லை? உள்நாட்டிலும் சரி, வெளிநாட்டிலும் சரி இந்திய அரசாங்கத்தின் கொள்கைக்கு வெற்றிதான் என்று உலக நிகழ்ச்சிகள் கூறுகின்றனவே!

தி. மு. க: எந்த உலகத்து நிகழ்ச்சிகள் கூறுகின்றன? ஒருவேளை கதர் உலகத்து நிகழ்ச்சிகள் கூறியிருக்கும்! கொஞ்ச நேரத்திற்குமுன் கூறிய புதுவை வெற்றியை எடுத்துக் காட்டி, இந்திய அரசாங்கம் பலம் மிகுந்த கொள்கை கொண்ட ஆட்சி என்று களிப்பு கொள்ளும் நண்பனே! படைத் தளபதிகள் ராஜினாமாபற்றிப் படித்தாயா?

காங்: படித்தேன்; ஏதோ பாதுகாப்பு மந்திரியுடன் உடன்பாடு இல்லையாம். அதனால்...

தி. மு. க: ஐயோ பாவம், எதில் உடன்பாடு இல்லையாம்?

காங்: பதவி உயர்வு தருவதிலாம்!

தி. மு. க: ஏன் அதில் உடன்பாடு இல்லை?

காங்: அது...அது....

தி. மு. க: அது உட்குழப்பத்தைக் காட்டுகிறது. இது பற்றிய ஒருமனப்பட்ட முடிவு —கொள்கை இல்லாததைத் தானே காட்டுகிறது? இத்தகைய பலவீனங்களை வைத்துக் கொண்டுதானா நீ 'வெற்றிக் கூத்து ஆடுகிறாய்; பிறருக்குக் 'கருமாதி'—என்று வாய் கூசாமல் கூறுகிறாய்? ஆமாம். மூன்று தளபதிகளும், பாதுகாப்பு மந்திரிகளும் ராஜிநாமா செய்து மறுபடியும் அதைத் திரும்பப் பெற்றுக் கொண்டார்களே, அது எப்படி என்றாவது தெரியுமா?

காங்: தெரியுமே! பண்டிதநேரு எல்லைகளில் நடக்கும் பயங்கரங்களைச் சுட்டிக் காட்டி வேண்டாம் ராஜினாமா என்றார். அதன்படி ராஜினாமாவைத் திருப்பி வாங்கிக் கொண்டார்கள்.

தி. மு. க: அப்போது.... எல்லைகளில் தகராறு இல்லையென்றால் ராஜினாமாவை நேரு ஏற்றுக் கொண்டிருப்பார்....! இல்லையா?

காங்: அப்படியில்லை!...

தி. மு. க:...பின் எப்படி? ஏதோ அவர்களின் வாயை அடக்க—கையைக் கட்ட அந்த 'எல்லைப் பிரச்னை' உதவிற்று. அப்படித் தானே? இந்த உள்நாட்டுக் குழப்பம், வெளிநாட்டிலும் உங்கள் கொள்கையின் பலவீனத்தைப் பறைசாற்றும், நண்பனே!

காங்: எப்படி?

தி. மு. க: முப்படைத் தளபதிகளும், பாதுகாப்பு மந்திரியும் ஒரு நாட்டில் ராஜிநாமா செய்கிறார்கள் என்று செய்தி வந்தால் உலகில் என்ன நினைப்பார்கள். 'சிறியதோர் புரட்சி! கலகம்!'—என்றுதானே நினைப்பார்கள்? அந்த நினைப்பு உங்களைப் பற்றி என்ன எடை போட்டிருக்கும்?

காங்: ....

தி. மு. க: மௌனம் ஏன் நண்பனே! பலகீனமான கொள்கைகளின் கொட்டில்தான் காங்கிரஸ் என்பதை ஒத்துக் கொள்ள ஏன் தயங்குகிறாய்? எல்லைகளிலே மாற்றார்களின் தொல்லையை நீக்க முடியாத உங்கள் ஆட்சி என்ன பலமிக்க' ஆட்சியா? தளபதிகளும் பாதுகாப்பு மந்திரிகளும் ராஜிநாமா செய்வது உங்கள் நிர்வாகம் ஒழுங்கான நிர்வாகம் தான் என்று கூறிடுமா? கல்கத்தாவில் பத்து, பனிரெண்டு —என்று பிணங்கள் விழுகின்றனவே அது உங்கள் ஆட்சியில் நிலவும் அமைதிக் கொள்கையையா குறிக்கும்?

காங்: ......

தி. மு. க: சென்னையிலே தினமணி–எக்ஸ்பிரஸ் முதலாளிக்கு ஆதரவாக இருந்து 700 குடும்பங்களைக் பட்டினி போடுவது உங்கள் சோஷலிசக் கொள்கையை நிலைநாட்டும் செய்கையா? அரிசிப் பஞ்சம், சீனிப் பஞ்சம் என்று பஞ்சங்களின் எண்ணிக்கையிய அதிகமாக்கிக் கொண்டே போவதா உங்கள் நல்லாட்சியைக் குறிக்கும் செயல்கள்? ஏன் — நண்பா திரும்புகிறாய்? அ ட டே! நில், நண்பா! எங்கே ஓடுகிறாய்?

செங்கற்பட்டு மாவட்ட

தி. மு. கழக 3-வது மாநாடு

செப்டம்பர் 12, 13-ம் (சனி, ஞாயிறு) நாட்களில்

பூவிருந்தவல்லியில்

டாக்டர் தருமாம்பாள் பந்தலில்—என். எஸ். கே. அரங்கில் நடைபெறும்.

தலைவர்: தோழியர். டாக்டர்.
எம். சேதுபாஸ்கரன் எம். பி.; பி. எஸ்.

திறப்பாளர்: தோழியர்
இராஜேஸ்வரி சண்முகம்

இரு நாகட்ளிலும்

அறிஞர் அண்ணா, நாவலர் நெடுஞ்செழியன்

மற்றும் கழக முன்னணி வீரர்கள் கலந்து கொள்வார்கள்.

12—9—59 சனி இரவு 10 மணிக்கு
கவிஞர் கண்ணதாசன் நடிக்கும்
புரட்சி நாடகப் பேரவையின்
குற்றம் குற்றமே—நாடகம்.

13—9—59 ஞாயிறு இரவு 10 மணிக்கு
முரசொலி நாடக மன்றத்தாரின்
சொர்ணம் எழுதிய
விடை கொடு-தாயே—நாடகம்.

—வரவேற்புக் குழுவினர்.

வெள்ளி 11—9—59 சென்னை

அறப்போர்!

அடிமைப் புத்தி கொண்டோர் ஆயிரம் நூல்கள்தான் படித்தவர்களாய் இருந்தாலும், எஜமானனின் மனம் கோணாது நடப்பதில்தான் கண்ணும் கருத்துமாய் இருப்பார்கள். ஆண்டையின் ஆசை 'காட்டாசை'யாக இருந்தாலும், அதற்குச் சிறு எதிர்ப்புக்கூட காட்டாது, அதை நிறைவேற்றிட தங்கள் பிள்ளைக்கனிகளைக்கூட பட்டாக்கத்திக்கு இரையாக்குவார்கள்; பத்தினிப் பெண்டிரின் கற்பைக் காற்றில் பறக்கவிடவும் தயாராவார்கள். அவர்களுக்கு வேண்டியதெல்லாம் எஜமானின் கனிவான பார்வை; கடுமை சிறிதுமில்லாத சொல்!

தியாகத்தின் போலி உருக்கொண்ட இந்தத் துரோகம் — அடிமைப் புத்தி — ஏதோ தனிப்பட்ட நபர்களின் வாழ்வில் தோன்றி மறைவதல்ல! நாட்டை ஆதிக்க வேட்டைக்காரர்களுக்குக் காட்டிக் கொடுத்தோர் — அயலானின் பாதுகையில் மையல் கொண்டு அதன் பெயரால் ஆள்வோர் — இவர்களின் வரலாற்றுச் சூத்திரமே அந்த அடிமைப் புத்திதான்.

ஆங்கிலேயருக்காக இங்கு செங்கோல் ஏந்தி ஆண்டவர்களின் ஆட்சியிலே இக்காட்சிகளைக் கண்டோம். வெள்ளை நிறத்தவன் எது சொன்னாலும் விழிமூடிப் பின்பற்றினார்கள். அவன் உள்ளம் நோகக்கூடாதே என்று அவன் ஏனாவுகளை இவர்களே சுமந்தனர். ஆட்சிபீடத்து வெள்ளையன் மட்டுமல்ல; பிளாட்பாரத்து வெள்ளையன் கூட தொழுது வணங்கிட வேண்டிய நிலைபெற்றான்! அடிமைப்புத்தி தலைக்கேறியதைக் காட்டும் இந்தச் செய்திகள் வரலாற்றுச் சுவடிகளில் மட்டும் ஒட்டிக்கொண்டிருக்கும் இறந்தகாலச் செய்திகளல்ல; இறக்காமல் வாழுகின்ற நிகழ்ச்சித் தொடர்!

அந்த நிகழ்ச்சித்தொடர் தொடர்ந்து வருகிறது வடக்கர் ஆட்சியிலும்! அவர்களின் அடிமை சர்க்காராயிருந்து ஆண்டு வருவோர் பழைய 'அடிமைகளின்' செயல்களையே செய்து சரித்திரம் திரும்பத் திரும்ப நிகழ்கிறது — என்ற பொன்மொழியை நிரூபிக்கின்றார்கள்.

வடவர்களின் கடைக்கண் பார்வையால் தங்கள் அரசியல் வாழ்க்கைச் சகடத்தை ஓட்டுபவர்கள், வடவரின் நலனுக்கு கலசமாக — கேடயமாக விளங்கி வருகிறார்கள். வடக்குச் சீமைக்காரர்களின் கண்களில் ஒரு துரும்பு விழுந்தாலும் இவர்களின் கண்களிலே தீ எரியும் இரும்பு புகுந்ததெனத் துடிப்பார்கள்!

அவன் மார்வாரியாக இருந்தாலும், மராட்டியாக இருந்தாலும், பீகாரியாக இருந்தாலும். பண்டிதர் நாட்டுக்காரனாயிருந்தாலும் கவலையில்லை; அவன் காப்பாற்றப்படவேண்டியவன். ஏனென்றால் டில்லி மூலக்கடவுளரின் சொந்தக்காரன் — என்கிற அளவுக்கு அடிமைப் புத்தியின் சுதியை உயர்த்திக்கொள்கிறார்கள். அதற்காக எந்தப் பலியையும் கொடுக்கத் தயாராகுகிறார்கள்; யார் கழுத்தையும் முறிக்கத் தயக்கம் காட்டுவதில்லை; எவர் இதயத்தைப் பிடுங்கி எறியவும் தயங்குவதில்லை!

இந்தக் கொரேச் செயல் துவங்கி **135** நாட்கள் ஆகின்றன! 'தினமணி—எக்ஸ்பிரஸ்' தொழிலாளர்களின் **700** குடும்பங்களைப் பட்டினியில் ஆழ்த்திவிட்ட முதலாளி கோயங்காவை மனதால் வாழ்த்திவிட்டு நிற்கும் கோரச் செயலைத்தான் காமராசர் ஆட்சி செய்துவருகிறது.

கடுவிஷம்போல் ஏறும் விலைவாசி — படுபள்ளமாய்க் காட்சியளிக்கின்ற வயிறுடனும், குழிவிழுந்த கண்களுடனும் ஏங்கி நிற்கும் குடும்பம்— சுடுசொற்களை அள்ளி வீசி, 'வெள்ளிப் பணத்தைத் தா— இல்லையென்றால் உன் கரங்களை விலங்குகளுக்கிடையே தா!' — என்று மிரட்டும் கடன்காரன் —

இத்தனை தொல்லைகளிலிருந்து ஓரளவு விடுபடத்தான் — சத்தில்லா வாழ்க்கையிலே கொஞ்சம் நிம்மதியைக்காணத் துடித்துக் கொண்டிருந்த 'தினமணி—எக்ஸ்பிரஸ்' தொழிலாளிகளின் உரிமையைப் பறித்துவிட முயன்றார் கோயங்கா. ஆரம்பத்திலிருந்தே தொழிலாளர்கள் தங்கள் உரிமைக்காகப் போராடினார்கள்; விடாது போராடினார்கள்.

என்றாலும், கோயங்கா ஒருசிறிதும் விட்டுகொடுக்கவே இல்லை! கதவடைப்பு நடத்தினார்! காமராசர் சர்க்கார் ஓடிவரவில்லை; கடுகடுத்த குரலில் ஏனிந்த அநியாயம் என்று கேட்கவில்லை. கடுகடுத்த குரலில் வேண்டாம், கனிவான குரலிலாவது சொல்லியிருக்கலாமே? அதுவும் கிடையாது!

சட்டத்திலுள்ள குறைபாடுகளை வைத்துக்கொண்டு வார்த்தை ஜாலம் ஆடித் ஞாலம் காக்கும் தொழிலாளர்கள் நாடியைத் தளர்த்திட, முயன்றார் கோயங்கா! மூண்டெழுந்த தொழிலாளர் அணி விடாது போராடியது!

அவர்கள் வேலை நிறுத்தம் செய்யும்போது — அறப்போர் துவங்கும்போது அவர்கள் முன்பு நூற்றுக்கணக்கான நாட்கள் தங்கள் குடும்பம் பட்டினியாய்க் கிடக்கும் என்று தெரியும் — குழந்தைகள் சோறு கேட்டு அழவும் சக்தியற்று பூச்சி விழுந்த பயிரென வீழப்போகும் காட்சியும் அவர்கள் மனதிலே தோன்றித்தான் இந்த அறப்போரிலே இறங்கியிருக்கிறார்கள்.

நூற்றி முப்பது நாட்களுக்கு மேலாக அந்த அறப்போர் கட்டுப்பாட்டோடு நடக்கிறதென்றால்—எல்லாக் கட்சி ஆதரவையும் பெற்று நடக்கிறதென்றால் அதிலே நீதியும் நேர்மையும் இல்லை என்று கூறிட யாருக்குத் துணிவு வரும்?

துணிவு பெற்ற சிலருக்குள்ளே, 'ஏழையர் அரசு எங்கள் அரசு' — என்று தம்பட்டம் அடித்துக் கொள்ளும் இந்த மாநில அரசும் ஒன்றாக இருக்கலாம்! அதிலும் குறிப்பாக தாம் தொழிலாளர் தலைவராக இருந்ததை அடிக்கடி நினைவூட்டி வருகிற வெங்கட்ராமனும் ஒருவராக இருக்கலாம்!

ஆனால் இதே துணிவு, இந்து பத்திரிக்கையில் தகராறு வந்தபோது தென்படவில்லை! தொழிலாளர்களை எதிர்த்துப் பேசவில்லை என்பது மட்டுமல்ல; தொழிலாளர்களின் அறப்போரில் போலீஸ் தலையிடாதபடி 'தள்ளி நிற்க'ச் செய்தார்; தொழிலாளர்கள் வெற்றியடைந்தார்கள்!

என் இந்துப் பத்திரிகைக்குக் கடைபிடிக்கும் அந்த முறை, 'இந்தியன் எக்ஸ்பிரஸ்—தினமணி 'தொழிலாளர்களின் போராட்டத்தில் கடைபிடிக்கவில்லை?

கடைப்பிடிக்காத காரணம், ஊரறிந்த—உலகறிந்த உண்மை. டில்லி மூலவர்களுக்குச் சொந்தக்காரர் ஒருவரை இப்படி தொழிலாளருக்குக் காட்டிக் கொடுத்து விட்டால் 'பண்டிதர் சீறுவாரே! பந்த் கோபிப்பாரே!'—பிறகு பதவியிருக்குமோ? படாடோபம் காணமுடியுமா?'—என்று எண்ணம்தான் அவர்களைத் தயங்க வைத்திருக்கும். அதோடு கோயங்கா காங்கிரசின் செல்லப்பிள்ளை — தேர்தலுக்குப் பயன்படும் நல்ல கற்பக மரம்—என்று நினைத்து அவருக்கெதிரான வழக்குகளில் ஈடுபடாதிருக்கலாம். சமரசத்தைக்கூட விரும்பாதிருக்கலாம். ஏனெனில் சமரசத்தில் இருவரையும் கண்டிக்க வேண்டிய கட்டம் வந்தால் என்ன ஆவது....?—என்றபயத்தில் பதுங்கியிருக்கலாம்.

எப்படியோ அறப்போர் நடக்கிறது! இரு ஊழியர்கள் தங்கள் உயிரைப் பணயம் வைத்து உண்ணாவிரதம் இருக்கிறார்கள். **700** குடும்பங்கள் ஏங்கித் தவித்துத் துடித்து நிற்கிறது —இந்தத் துன்பச் சூழ்நிலை நீங்கிட பொது மக்கள் அனைவரும் சூளுரைத்துக் கிளம்ப வேண்டியவர்களாக இருக்கிறார்கள்.

எனினும் 'சோஷலிச பாணி' என்றும் 'தொழிலாளர் அரசு'— என்றும் தொகையறு பாடிடும் இந்த அரசினரின் உள்ளத்தில் என்னதான் இருக்கிறது என்பதைக் காணவும், இந்த அரசினருக்கு சமரசத்தில் உண்மையான பற்றிருக்கிறதா என்று உலகிற்குக் காட்டவும் அறிஞர் அண்ணா அவர்கள் சொன்னதுபோல் ஒருமுறை தூதுக்குழு அமைச்சரைக் கண்டு பேசிட வேண்டும்.

பேச்சு பலித்ததென்றால், மீண்டும் **700** குடும்பங்கள் பஞ்ச நிலையிலிருந்து விடுபட்டதென்றால் நம்மைப்போல் பெருமகிழ்வடைபவர்கள் யாருமில்லை.

ஆனால், அரசின் போக்கு அடிமைத்தனத்தைப் பிரதிபலித்ததென்றால், **700** குடும்பங்களின் இன்பத்தையும் பலிகொள்ளும் எனத் தெரிந்தால், இரு உயிர்களைக் காப்பாற்றத் தவறிவிடும் என அறிந்தால் இந்த அரசாங்கத்தைத் திருத்த — முதலாளியின் வழியைத் திருப்ப இருப்பது ஒரே வழி!

பொதுமக்களே! இந்தத் தொழிலாளர்களுக்காக ஒரு ஆதரவு மொழி; விவேகமுள்ள ஒரு செயல்; ஒரு உணர்ச்சிப் பெருமூச்சு!

அது போதும்; அந்த மாபெரும் பெருமூச்சுப் புயலிலே நீங்கள் நினைத்தது நடக்கும்! ஃ

தன்னைக் கொன்று புசிக்கப் போகிறவனின் கையிலேயே அமர்ந்து புரு, தானியத்தைக் கொரித்துக் கொண்டிருக்கும். சற்று நேரத்தில் பலிபீடத்தில் தலையை இழக்கப்போகும் ஆட்டுக்குட்டி, பூசாரியின் கையிலுள்ள பசும் புல்லை நுனிப்பல்லால் கடித்துச் சுவை பார்த்துக் கொண்டிருக்கும். புருவுக்கும் ஆட்டுக்குட்டிக்கும் தங்களைக் கொல்லப் போகிறவர்களே உணவும் அளிக்கிறார்கள் என்ற ரகசியம் தெரியாது.

ஆனால் இருங்கோவேளுக்கு நன்றாகவே புரிந்திருந்தது; தன்னை ஒழித்துக்கட்டத் துடித்து நிற்பவளே தன் தோள்மீது மெய்மறந்து சாய்ந்திருக்கிறாள் என்ற உண்மை! யாரைத் தலையெடுக்கவொட்டாமல் செய்து விட வேண்டுமென்று வீட்டை விட்டுப் புறப்பட்டாளோ அவனுக்கே இன்பவல்லியாக அவள் மாறிவிட்ட விந்தையை அவனும் நினைத்துப் பார்த்து சிரித்துக் கொண்டான்.

"நான்தான் இருங்கோவேள்!" என்று கூறிவிட்டால்? அதைக் கேட்டதும் அவள் நிலை என்ன ஆகும்? பாவம்; அவளைப் பார்க்கும்போது எவ்வளவு பரிதாபமாக இருக்கிறது! கோடையின் கொடுமை தாங்காது பாம்பு படமெடுத்தவாறு தன்னை மறந்து நிற்குமாம். அதன் நிழலிலே வந்து தவளை ஒண்டிக் கொள்ளுமாம். அதைப் போலத்தான் காதல் மகத்துவத்தால் தங்களை மறந்து இருவருமே ஒன்றுபட்டனர்.

முத்துநகையின் முகத்தையே அவன் பார்த்துக்கொண்டு நின்றான். ஒருவனைக் கொன்று விட்ட பிறகு ஏற்பட்ட பயத்தின் சாயல் அவள் முகத்தில் படர்ந்திருந்தது.

"என்ன பார்க்கிறீர்கள்?" என்று இதழ்கள் சிறிது நடுங்க அவள் கேட்டாள்.

"ஒன்றுமில்லை. உன் இதழ்கள் உலர்ந்து விட்டனவே; என்று பார்க்கிறேன்" எனக் கூறியவாறு அவைகளை ஈரமாக்கினான்.

"அத்தான்!" என்று உச்சரித்தவாறு கண்களை மூடிக்கொண்டு அவனைக் கட்டித் தழுவிக் கொண்டாள்.

"என்ன இருந்தாலும் ஒரு எதிரியைக் கொலை செய்கிற அளவுக்கு உனக்குத் துணிவு ஏற்பட்டிருக்கக் கூடாது!" என்று அவள் கன்னத்தோடு கன்னம் பதித்தான்.

தன் காந்தள் விரல்களால் அவன் முகத்தை வருடியவாறு

17. "தோகை விடுதூது!"

"ஏனத்தான் அப்படிச் சொல்கிறீர்கள்? கடமையை நிறைவேற்றும்போது ஒரு தமிழச்சியின் உள்ளத்தில் கோழைத்தனம் குறுக்கிடலாமா?" என வினவினாள் முத்துநகை.

"உன் வீரத்தை நான் இகழவில்லை. உன செயலை நான் பாராட்டாமல் பேசவில்லை. உன் உயிருக்கு ஏதாவது ஆபத்து ஏற்பட்டிருந்தால் பிறகு என் கதி?" என்று அவளைப் பார்த்துக் கேட்டான். அதைக் கேட்கும்போது அவன் கண்கள் கலங்கி விட்டன. ஆம்; அவனை அவளிடம் ஒப்படைத்து விட்டான் என்பதற்கு அது எடுத்துக்காட்டு.

கலங்கிய அவன் கண்களைக் கண்டதும் முத்துநகைக்கு மகிழ்ச்சி பொங்கியது. அந்த மகிழ்ச்சியும் அவுள் கண்களைக் குளமாக்கியது. மகிழ்ச்சி ஆரவாரத்தில் வளரும் காதல், நீர் வீழ்ச்சியின் அடியில் சிக்கிய மலர்போலக் கசங்கி விடுவதும் உண்டு. கண்ணீரில் மலரும் காதல், சேற்றில் மலரும் செந்தாமரையாகக் காட்சி தருவதும் உண்டு. இதில் இரண்டாம் வகைக் காதலை அவர்கள் வளர்த்தனர். அவளுக்கு எந்தக் குழப்பமும் இல்லை, காதலைப் பற்றிய மட்டில்!

ஆனால் அவன்தான் புயலானான். தூய்மையான காதலை வளர்த்துக்கொண்ட பிறகு அவளை எப்படி ஏமாற்றுவது என்று எண்ணி எண்ணி ஏங்கினான். அவள் இருங்கோவேளுக்கு எதிரிதான்! ஆனால் அவனுக்கு அருமைக் காதலி! அவளில்லாது இனி மேல் அவனால் உயிர் வாழ முடியாது. அதற்காக அவன் நாடிழந்து நகர் இழந்து அரச பதவியிழந்து ஆண்டிபோல் காட்டில் உலவிக் கொண்டிருக்கவும் முடியாது. தன்னை வென்ற கரிகாலனைப் பழிவாங்காமலும் இருக்க முடியாது. இப்படியொரு அமைதியற்ற உளைச்சேற்றில் மாட்டிக் கொண்டு அவன் திணறிக் கொண்டிருந்தான்.

வெறித்து ஆகாயத்தைப் பார்க்கிறான். வீரம் பறக்கிறது கண்களில்! மீசைகள் பயங்கரமாகத் துடிக்கின்றன! நெஞ்சம் கனலாக மாறுகிறது! பூமியை உற்று நோக்குகிறான். இந்த மண்ணில் சிறு பகுதியும் தன் ஆட்சிக்கு உட்பட்டதில்லை என்று பெருமூச்சு விடுகிறான். மூச்சின் காற்றுப்பட்டு புழுதி பறக்கிறது. கால்களை ஓங்கி உதைக்கிறான் தரையில்!

விபரம் புரியாமல் முத்துநகை, அவனை வியப்புடன் பார்க்கிறாள். அவனும் பார்க்கிறான்.

வீரம் கொட்டிய விழிகளில் ஈரம்!

ஆவேசம் படர்ந்திருந்த முகத்தில் அன்பு ஒளி!

"கண்ணே!" என்று அவளை அணைத்துக் கொள்கிறான். அவளிடம் உண்மையைச் சொல்லி விட வேண்டும் போல் இருக்கிறது. நெஞ்சில் ஓங்கி ஒரு அடி விழுகிறது. "பைத்தியக்காரா! என்ன காரியம் செய்யத் துணிகிறாய்? உண்மையைச் சொன்னால், காதல் காற்றில் பறந்து விடும். காதலி காளியாகி விடுவாள். எச்சரிக்கையாக இரு!" என்ற உணர்வை அந்த அடி எழுப்புகிறது போலும்! பிறகுதான் தெரிகிறது; அவனேதான் அவன் நெஞ்சில் அடித்துக் கொண்டிருக்கிறான்! குழப்பத்திலும் மௌனமான இன்பத்திலும் சிறிது நேரம் கழிந்தது.

"நேரமாகிறது அத்தான்! தாமரை தேட ஆரம்பித்து விடுவாள். பிறகு ஆபத்து. நான் போகட்டுமா?"

"போவதா? இப்போது நீ போக முடியாது. உனக்கு ஒரு பெரிய வேலையிருக்கிறது."

"என்ன வேலை?"

"பாண்டிய நாட்டுப் படைகள் இருங்கோவேளைப் பிடிப்பதற்காக வருவது உனக்குத் தெரியுமல்லவா?"

"அதுதான் தெரியுமே — அதற்கு நான் என்ன செய்ய வேண்டும்?"

"நான் உடனே போய் பாண்டிய நாட்டுப் படையை வழியிலே சந்தித்தாக வேண்டும். இருங்கோவேளின்மீது எப்போது பாயலாம் — எப்படி அவனை வளைக்கலாம் — என்பதற்கான நேரம், காலம், வழி முதலியவற்றைச் சொல்லி விளக்கிட வேண்டும்!"

"அப்படியானால் படையெடுப்பு நடக்கும்போது நான் எங்கேயிருப்பது?"

"நான் சொல்லப் போகிற வேலையை முடித்து விட்டு என்னை வந்துபார்! அப்போது சொல்கிறேன்; படையெடுப்பின் போது உன் நிலைமை என்னவென்று! நீ என்னை சந்திக்கிற வரையில் படையெடுப்பு நடக்காது!"

"அவ்வளவு முக்கியமான பணி எனக்கு என்ன இருக்கிறது?"

"இருங்கோவேளைப் பற்றி சில இன்றியமையாத ரகசியங்களைக் கரிகாலரிடம் தெரிந்து கொள்ள வேண்டியிருக்கிறது. அதற்கு நான் கரிகால் சோழரை சந்தித்தாக வேண்டியிருக்கிறது. நான் அவருக்கு இதற்கு முன்பு அறிமுகமானவனல்ல. நீ அவரிடம் சென்று, நான் எப்போது வந்தால் அவரைத் தனியாக சந்திக்கலாம் என்று செய்தி அறிந்து வர வேண்டும்!"

"தேவையான விபரங்களை என்னிடம் கூறுங்களேன். நானே அரசரிடம் கேட்டு வருகிறேன்."

"இல்லை கண்ணே...... நானும் அவரும் அதுபற்றி நீண்ட நேரம் பேசவேண்டியிருக்கிறது. அந்தச் சந்திப்பு நடந்தால்தான் இருங்கோவேளைப் பிடிப்பது சுலபமான காரியமாகும்."

"சரி. தங்கள் இஷ்டப்படியே அவரைப் போய்ப் பார்க்கிறேன். அவர் சந்திப்பதற்கு சம்மதம் தந்துவிட்டால் உங்களை நான் எங்கே கண்டு செய்தியைக் கூறுவது?"

"அதுதானா பெரிய காரியம்? நமது பழைய பாழ் மண்டபத்தில் உனக்காகக் காத்திருக்கிறேன். அதுதான்; அந்த மண்டபம்—நீ குளித்தாயே அந்தக் குளம்கூட இருக்கிறதே...."

"போங்கத்தான்!"

—என்று அவன் மார்பில் முகத்தைப் புதைத்துக் கொண்டாள். அவளது அழகிய உச்சந்தலையில் 'இச்'சென்று முத்தமீந்தான் இருங்கோவேள். கரிகாலனும் இருங்கோவேளும் சந்திப்பதற்கு நேரம் குறிப்பதற்குப் புறப்படுகிருள் முத்துநகை. பகைவனின் வில்லுக்குக் கணையாகிவிட்ட அந்தப் பாவையைப் புன்னகையுடன் வழியனுப்பிவைத்தான் இருங்கோவேள்.

விழி வழியே நெஞ்சில் நுழைந்துவிட்ட வீரபாண்டியின் திரு உருவின் எழிலையெண்ணி மகிழ்ந்தவாறு அவன் இட்ட கட்டளையை நிறைவேற்றவும், சோழ நாட்டுக்கு ஏற்பட்ட வகையை வீழ்த்தவும்தான் பணியாற்றுவதாகத் தவருகக் கருதிக் கொண்டு அவள் போய்க் கொண்டேயிருந்தாள்.

அவள் போகும் வழியையே பார்த்துக் கொண்டிருந்துவிட்டு இருங்கோவேள், தன் படை வீரன் கொடுங்கோல் வீழ்ந்து கிடக்கும் இடத்திற்கு வந்தான். அவன் இறந்து கிடக்கும் கோரத்தைக் கண்டு மனம் உருகினன். சடலத்தைத் தூக்கித் தன் குதிரையில் வைத்துக் கொண்டு, மரமாளிகை நோக்கி விரைந்தான்.

மரமாளிகையின் வாயிற்புறத்தில் அமைதியற்று உலவிக் கொண்டிருந்த தாமரை, இருங்கோவேளின் கண்களில் பட்டுவிட்டாள். அண்ணனையும் அவன் தூக்கிவரும் பிணத்தையுங் கண்டதும் எதிரே ஓடி, "அண்ணு! என்ன நடந்தது?" என்று ஆவலுடன் கேட்டாள்.

இருங்கோவேள், பதில் எதுவும் கூறவில்லை. எதிரே நின்ற வீரனைக் கூப்பிட்டு உடனே அமைச்சரை அழைத்துவருமாறு உத்திரவிட்டான். அமைச்சரும் வந்து சேர்ந்தார்.

"கொடுங்கோல், வழியில் கொல்லப்பட்டான். இதோ இருக்கிறது செழியனின் ஓலை! வெகு விரைவில் இதைப் பாண்டிய நாட்டுப் படைத் தளபதியிடம் சேர்த்தாக வேண்டும். மதுரையை விட்டுப் படை புறப்பட்டு நம்மை நோக்கி வருவதாகச் செய்தி கிடைத்திருக்கிறது. உம்! உடனே ஓலையை அனுப்புங்கள். அத்துடன் நமது இருப்பிடத்தைச் சுற்றி காவல்கள் பலமாகட்டும். எதிரிப் படை வருகிறதா என்று அறிய நாலா பக்கங்களிலும் ஆட்கள் செல்லட்டும்." என்று உத்திரவு பிறப்பித்துவிட்டு, தங்கையைப் பார்த்து, "தாமரை! என்னோடு வா!" என்று அழைத்துக் கொண்டு உள்ளே சென்றுன்.

இருங்கோவேள் இட்ட உத்திரவுகளை உடனடியாக நிறைவேற்றும் வேலையில் அமைச்சர் ஈடுபட்டார். பாண்டியப் படைத் தளபதியைச் சந்திக்க ஓலை கொண்டு மற்ருெரு வீரன் புறப்பட்டான்.

இருங்கோவேள், தாமரையைத் தனியான ஒரு இடத்திற்கு அழைத்துச் சென்று "யாரை எதிர்பார்த்தம்மா வாயிற்புறத்தில் காத்திருந்தாய்?" என்று வினவினன்.

"யாரையுமில்லை அண்ணு!" என்று மழுப்பினுள் தாமரை.

"எல்லாம் எனக்குத் தெரியும். அந்த மருத்துவ வாலிபனுக்காகத் தானே காத்திருந்தாய்?"

"ஆம் அண்ணு; ஆம்! பச்சிலைகள் பறித்து வருவதாகப் போனவரைக் காணவில்லை. அண்ணிக்கு எப்போது மருந்து கொண்டு வருவார் என்று எதிர்பார்த்து நின்று கொண்டிருந்தேன்."

"ஒரு சோகமான செய்தி சொல்லுகிறேன்; கேள்!"

"என்ன அண்ணு?"

"அவனைக் காட்டிலே ஒரு புலி கொன்று விட்டது—"

"ஆ! உண்மையாகவா? அண்ணு! அண்ணு!!"

தாமரை மயக்கமடைந்து விழுந்து விட்டாள். இருங்கோவேள் ஓடிச் சென்று அவளுக்கு சிகிச்சைகள் செய்து மயக்கம் தெளிவித்து உட்கார வைத்தான். தாமரையின் கண்களில் தாரை தாரையாக நீர் கொட்டியது.

"எப்படியண்ணு அந்தக் கொடுமை நடந்தது?" — அவளுக்குத் துக்கம் நெஞ்சையடைத்தது.

"என் கண் முன்னலேயே அவன் கொல்லப்பட்டான். அவன் உடலைக்கூட கீழே எறியாமல் புலி, தூக்கிக்கொண்டு ஓடி விட்டது!"

"அய்யோ—அண்ணு!"

தாமரை, தலையைச் சுவற்றில் முட்டிக்கொண்டு கோவெனக் கதறி அழத் தொடங்கினுள்.

"தாமரை! என்ன இது? எத்தனையோ வீரர்களை, தளகர்த்தர்களைப் போரிலே இழந்து விட்டு இங்கே வந்து உட்கார்ந்திருக்கிறோம். அப்போதெல்லாம் உன்னை இப்படி அழவைக்காத நிகழ்ச்சி இப்போது மட்டும் நடந்து விட்டதா என்ன? ஒரு சாதாரண ஊமை மருத்துவனுக்காகவா இப்படி அலறுகிருய்?"

"அண்ணு! அண்ணு!!" — தாமரையின் கதறல் அதிகமாயிற்று.

"நிறுத்து, தாமரை, நிறுத்து! முட்டாளே! நீ ஏன் அழுகிருய் என்று எனக்குத் தெரியும். அந்த மருத்துவன் உன்னை மயக்கிவிட்டான்..."

"அண்ணு!"—தாமரை இருங்கோவேளிடம் ஓடிவந்து அவன் காலில் விழுந்தாள். "என்னை மன்னித்து..." என்று விம்மி அழுதாள். வார்த்தையை முடிக்காமல் அவன் பாதங்களைக் கண்ணீரால் குளிப்பாட்டினுள்.

"அந்த மருத்துவன் யார் தெரியுமா? அவனிடம் உன் மனதைப் பறிகொடுத்தாயே. பைத்தியக்காரி! அவன் நமது எதிரி! பகைவர்கள் அனுப்பிய ஒற்றன்!"

"அப்படியானல் நீங்கள்தான் அவரைக் கொன்று விட்டீர்களா?"—தாமரை ஆவலுடன் கேட்டாள்.

"நாங்கள் ஏன் அவனைக் கொல்ல வேண்டும்? அவனே செத்துவிட்டான். புலி அடித்ததும் மருத்துவன் செத்துவிட்டான். ஆனல் அதில் ஒரு ஆச்சரியம் என்னவென்ருல் புலியின் நகம் பட்டதும் மருத்துவன் மங்கையாக மாறிவிட்டான. மருத்துவன் செத்தான்; மங்கை தோன்றினுள்."

"என்ன அண்ணு? எனக்கொன்றும் புரியவில்லையே!"

"புரியாதுதான்! ஆமாம் தாமரை—உன் அண்ணனுக்கு போர்ப்புலியென்று ஒரு பட்டம் உண்டல்லவா? ஞாபகம் இருக்கிறதா உனக்கு?"

"அதற்கென்ன?"

"இந்தப் புலிதான் அந்த மருத்துவனைக் கொன்றது. கொன்றதும்—மருத்துவன், மங்கையாக மாறி விட்டான். இன்னும் உனக்குப் புரியவில்லையென்ருல் சொல்கிறேன் கேள்—நீ யாரிடத்திலே உள்ளத்தைப் பறிகொடுத்திருக்கிருயோ, அவன் நீ நினைப்பது போல ஆடவன் அல்ல! அழகான ஆரணங்கு! அது மட்டுமல்ல; எதிரி நாட்டு அரசர்களின் துணையோடு நம்மை அழிக்க வந்தவள். அவளை நான் கண்டு பிடித்துவிட்டேன். ஆனலும் தெரியாதவனைப்போல நடித்துக் கொண்டிருக்கிறேன். நீயும் அவளிடம் எச்சரிக்கையாக நடந்துகொள்!"

"நீங்கள் சொல்வதை நம்பலாமா அண்ணு?"

"ஒரு தங்கையிடம் அண்ணன் இதைவிட அதிகமாக என்ன பேச முடியும்? அவள் எங்கும் போய்விடப் போவதில்லை. திரும்பி இங்குதான் வரப்போகிருள். அப்போது நீயே அவளை சோதித்துப் பார்த்துக்கொள். நான் இதைச் சொல்வதற்குக் காரணமே; ஏமாற்றத்தால் உன் உள்ளம் உடைந்துவிடக்கூடாதே என்பதற்காகத்தான்! முடிந்தால் நானே அவள் யாரென்று உனக்கு நிருபித்துக் காட்டுகிறேன். எப்படியாவது அந்தச் செழியனை இங்கிருந்து விடுவித்துக்கொண்டு போவதற்காகவே அவள் வந்திருக்கிருள்"

—அண்ணன் தந்த தகவலைக் கேட்டு தாமரை இடிந்து போனுள். இருப்பினும் அவளுக்கு ஒரு ஆறுதல். அதே சமயம் தாங்க முடியாத வெட்கம். ஒரு பெண்ணைப் போய்க் காதலித்திருக்கிறோமே யென்று எண்ணி எண்ணி மன்மொடிந்தாள்.

* * *

தனக்கு எதிராக மரமாளிகையில் நடைபெறும் உரையாடலைப்பற்றிய சிந்தனைகூட இல்லாமல் முத்துநகை, தன் காதலன் தனக்கிட்ட கட்டளையை நிறைவேற்றுவதற்காக கரிகாலனின் மாளிகையில் நுழைந்தாள். கரிகாலனைத் தனியாக சந்தித்தால் அவனைக் கொன்று வீழ்த்திவிட்டு சோழ மண்டலத்தையே தன் காலடியின்கீழ் கொண்டு வரவேண்டுமென்று யார் மனக்கோட்டை கட்டியிருக்கிருனே அவனுக்குச் சாதகமாகச் சோழ நாட்டுச் சுடர்கொடியாம் முத்துநகை சோழப் பேரரசனிடம் பேசுவதற்குப் போய்க் கொண்டிருந்தாள்.

[தொடரும்]

வாழ்க மணமக்கள்!

செழியன் - பிரேமா

பொதுச் செயலாளர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்களின் இளவலான தோழர். இரா. செழியன் எம். ஏ. அவர்களுக்கும், சென்னை அரசு சம்பளம்—கணக்குப் பகுதித்துணை அலுவலாளர் திரு. என். சண்முகசுந்தரம் அவர்களின் புதல்வி திருமதி பிரேமா எம். பி. பி. எஸ்., அவர்களுக்கும் சென்னை பூவிருந்தவல்லி நெடுஞ்சாலையிலுள்ள 'ஆலத்தூர் வில்லா'வில் கடந்த ஆகஸ்ட் திங்கள் இருபத்தாரும் தேதி திருமணம் மிக்கச் சிறப்புடன் நடந்தேறியது. கழக முன்னணி வீரர்களும், மற்றெல்லாக் கட்சியன்பர்களும், உறவினர்களும், பெரு மக்களும் வந்திருந்து மணமக்களை வாழ்த்தினர். அறிஞர் அண்ணுவின் தலைமையில் நடைபெற்ற இத்திருமணத்தில், இசைச் செல்வர்-சி. எஸ். செயராமன் அவர்களின் இசைவிருந்து வந்திருந்தோரை உற்சாகக் கடலில் ஆழ்த்திற்று. திருமண வாழ்வில் சீரும் சிறப்பும் பெறுக என மண மக்களை வாழ்த்துகிறோம்.

★

சரசுவதி - சுதர்சனன்

கழக முன்னணி வீரரும், 'இனமுழக்கம்' ஏட்டின் ஆசிரியருமான சிந்தனைச் சிற்பி சி. பி. சிற்றரசு அவர்களின் செல்வி சி. சரசுவதிக்கும், வேலூர் தோட்டப்பாளையம் (காலம் சென்ற) பி. வரதராசுலு அவர்களின் மைந்தர் பி. வ. சுதர்சனனுக்கும் அறிஞர் அண்ணு தலைமையில் சென்னை தென்னிந்திய நடிகர் சங்கக் கட்டிடத்தில் செப்டம்பர் திங்கள் 5-ம் நாள் திருமணம் சிறப்புற நடைபெற்றது. கழகப் பேச்சாளர்களும், தலைவர்களும் வருகை தந்து மணமக்களை வாழ்த்தினர். வாழ்க மணமக்கள்!

★

மதியழகன் - ராசசுந்தரி

'தென்னகம்' ஏட்டின் ஆசிரியரும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் முன்னணி வீரருமாகிய தோழர். கே. ஏ. மதியழகன் பி. ஏ., அவர்களுக்கும், ஆனைமலை திரு. ஏ. எஸ், குப்புசாமி அவர்களின் புதல்வி ராசசுந்தரிக்கும் ஆனைமலையில், செப்டம்பர் திங்கள் 9-ம் தேதி அறிஞர் அண்ணு அவர்கள் தலைமையில் திருமணம் மிக்கச் சிறப்புடன் நடைபெற்றது. தென்னகத்து விடுதலைப் படையினர் முழுதும் ஆனைமலையில் குழுமியிருந்து, 'தென்னகம் ஆசிரியரின் மண வாழ்வு சிறக்க!'—என உளமார — வாயார வாழ்த்தினர். நாமும் வாழ்த்துகிறோம், 'மணமக்கள் நலம் பெறுக!'—என!

'எங்கள் அண்ணு' சிறப்பு மலர் தயாரிப்பை முன்னிட்டு இந்த இதழ் எட்டுப் பக்கங்களில் வெளிவருகிறது. அடுத்த இதழ் வழக்கம்போல் வெளிவரும்.

ஏழை நாடு தாங்குமா?

ஏழையரின் ஆட்சியல்ல நடப்பது; கிடைக்கிறவரை கோலாகலமாய் இருந்து விட்டு ஆட்சியைவிட்டு இறங்கும்போது வெறுங் கலமாய் அரசாங்கத்தை ஆக்கிவைக்கும் எண்ணம் படைத்தோரின் ஆட்சிதான் நடக்கிறது!

அவர்களின் செலவு ஆடம்பரச் செலவு!

அவர்களின் செயல் ஆடம்பரச் செயல்!

அவர்களின் ஆட்சி ஆடம்பர ஆட்சி!

—என்று கூறுமளவுக்கு அந்த ஏழைப்பங்காளர்களின் சரித்திரம் தொடருகிறது.

ஆட்சியின் எந்த ஏட்டைப் புரட்டினுலும், இதே வாடைதான் அடிக்கிறது; மூக்கைத் துளைத்து மூளையின் வாசனை நரம்புகளை இற்று விழச்செய்யும் அளவிற்கு அந்த வாடையின் வேகம் இருக்கிறது.

இதுவரை அரசினர் செலவு செய்த எந்தச் செலவையும் எடுத்துப்பாருங்கள். எந்தச் செலவிலும் சிக்கனத்தின் நிழலே இருக்காது! ஆடம்பரத்தின் ஆனந்த நடனமே இருக்கும்!

ஏன் அண்மையில் கூட அந்த ஆடம்பர—அநியாயச் செலவுப் பேரேட்டில் இன்னெரு ஏடு சேர்ந்திருக்கிறது.

நேருப் பண்டிதர் உதகை வந்து தங்கிச்சென்ற செலவுதான் அது! கட்டிய முழங்கால் துண்டுடன் ஒட்டிய வயிறுடையோருக்கு வாழ்வு தேடிப் புறப்பட்டதாகக்கூறும் 'காந்தியாரின் வாரிசு' ஒரு வாரம் தங்குவதற்கான செலவு எவ்வளவு தெரியுமா?

30 ரூபாயல்ல!

300 ரூபாயல்ல!

3,000 ரூபாயல்ல!

30,773—12—0!

முப்பதாயிரத்து எழுநூற்று எழுபத்துமூன்று ரூபாயும் பன்னிரண்டு அணுவும்!

ஆம்; இது ஒரு வாரத்துச் செலவுதான்! எனவே, ஒரு நாளையச் செலவு ஏறத்தாழ 4,000 ஆகிறது! இது நாட்டின் முதல்வர் செய்த செலவு!

ஆண்டொன்றுக்கு ஏறத்தாழ 250 ரூபாய் வருமானமுள்ள — அதாவது ஒரு நாளைக்கு 69 புதுக்காசுகளே வருமானமுள்ள குடிமகன் வாழும் நாட்டின் முதல்வர் செய்த செலவு!

நாட்டுக் குடிமகனின் ஒரு நாள் வருமானமே 69 புதுக்காசுகள்!

நாட்டு முதல்வரின் ஒரு நாள் செலவு மட்டும் 4000 ரூபாய்!

நாடு தாங்குமா; நல்லவர் இதயம்தான் ஒப்புமா இச் செயலை?

உதவாக்கரை ஆட்சி! ஓட்டைவிழுந்த நிர்வாகம்!

புலியும் புள்ளிமானும் ஒரே நீர்த்துறையில் நீர் குடித்ததாகக் கூறப்படும் இந்தப் 'பரத' கண்டத்தில்தான் நாள் தவறினுலும், பொழுது தவறினுலும் கொலைக் கேசுகளும் கொள்ளையிட்ட வழக்குகளும் வருவது தவறுவதில்லை. சினிமா நடிகருக்கு அடுத்தபடி அதிக வருமானம் பெறுகின்ற தொழிலாக — 'அதிக வருவாய்' உள்ள தொழிலாக — வக்கீல் தொழில் இருந்து வருகிறது. வக்கீல்களின் பேரிலா இந்தத் தப்பு? இல்லை; மக்களின் பேரில்; மக்களின் உள்ளங்களின்பேரில் —அந்த உள்ளங்களைத் திருத்த முயலாத—இயலாத இந்த அரசாங்கத்தின் பேரில்தான் இந்தத் தவறு விழுகிறது.

நாட்டில் நல்லெண்ணத்தை மட்டுமல்ல; நிர்வாகத்தைக்கூட சரிவர செய்ய முடியாதவர்களாக அவர்கள் இருக்கிறுர்கள்.

அரசாங்க ஊழியர்களிடையே அலட்சிய மனேபாவத்தை—கடமையைத் தட்டிக் கழிக்கும் நினைப்பை — அரசாங்கமே விதைத்து வருகிறது. 'இல்லை இல்லை; — இதற்கு நாங்கள் பொறுப்பு இல்லை—அவர்களுடைய பொறுப்பின்மைக்கு அரசாங்கமா காரணம்?'—என்று அரசாங்கத்தினர் கூறித் தப்பித்துக்கொள்ள முயலலாம்.

ஆனுல் நல்ல அரசாங்கம் நடைபெறும் காலத்தில் இத்தகைய ஒழுங்கீனங்கள் பரவா—

பம்பாய். ஆஸ்பத்திரி தரும் சுவையான கதை!

அரசினர் இலாகாக்களிலே அலட்சியம் படராது—என்பதைத்தான் நம் நாட்டு வரலாறு நமக்குப் போதிக்கும் பாடம்!

நல்ல — திறமைமிக்க அரசாங்கம் இல்லாதபோதுதான் அரசாங்க நிறுவனங்களின் ஊழியர்களிடையே அலட்சியம் பரவும் என்பதையும் அந்த வரலாறுகள் போதிக்கின்றன.

நம் நாட்டு அரசாங்கமும் அத்தகைய நல்ல—திறமை மிக்க அரசாங்கம் அல்ல—என்பதை அரசாங்க இலாகாக்களில் தொடர்பு வைத்தோர் மிக விரைவில் உணர்ந்து கொள்ளலாம்.

இதற்கு ஆயிரமாயிரம் உதாரணங்கள் தரலாம். என்றுலும் அண்மையில் ஒரு சுவைமிகு நிகழ்ச்சி நமக்கு அரசாங்கத்தின் —அரசாங்க ஊழியர்களின் விசித்திர நடவடிக்கைகளைப் படம் பிடித்துக் காட்டுகிறது.

அந்த நிகழ்ச்சியில் கதாபாத்திரம் தாங்குபவர் பம்பாயிலிருந்து வெளிவரும் ஆங்கில ஏடான 'கரண்ட்' பத்திரிகையின் ஆசிரியர் டி. எப். கராகா என்பவர்.

சென்ற ஆகஸ்ட் திங்களில் அவர் பம்பாய் மருத்துவ மனைக்குச் சென்றுராம், ஒரு நோயாளியாக! அவருடன் அவரது மனைவியும் இன்னெரு நர்சும் சென்றனர். அவர், தன்னுடன் 'காது, மூக்கு, தொண்டை நிபுணர்' ஒருவரின் கடிதத்தையும் எடுத்துச் சென்றுராம். அதில் 'பம்பாய் மருத்துவமனையில் காலை 11 மணிக்கு ஆபரேஷன் கூடத்தில் என்னைப் பார்க்கவும்' — என்று அவர் எழுதியிருந்தார்.

விசாரணைக் கூடத்திலிருக்கும் நபரை இது பற்றி விசாரித்துத் தெரிந்து கொள்ளப்போனுர், 'கரண்ட்' ஆசிரியர்!

அங்கு ஒருவரும் இல்லை!

அது வேலை செய்ய வேண்டிய நேரந்தான்! இருந்தும் ஒருவரையும் காணேம். தேடிப் பார்த்தார் கராகா. கடைசியில் அந்த அறைக்குப் பின்புறம் விசாரணைக் கூடத்திலிருக்க வேண்டிய நபர் தன் நண்பர்களுடன் பேசிக் கொண்டிருந்தார். அவர் சினிமா நடிகரைப்போல் தலை வாரிக் கொண்டிருந்தார். அவர் அணிந்திருந்த சட்டை, மருத்துவ மனையில் அணிய வேண்டிய சட்டையாக இல்லை.

யாரோ ஒருவர் நிற்பதைப் பார்த்த அந்த 'சினிமாக்காரர்' திரும்பி தன் மேஜைக்கருகில் வந்து வெகு அலட்சியமாக 'என்ன....?' — என்று கேட்டாராம்.

டாக்டரின் சீட்டைக் காண்பித்தார். உடனே 'அவர்' 'முதல் மாடி'—என்று மாடிக்கு அழைத்துச் செல்லும் மின்சார 'லிப்ட்'டைக் காட்டினர்.

இது கராகா கண்ட அரசாங்க சிப்பந்தி தந்த முதல் அதிர்ச்சி!

* * *

'லிப்ட்'டில் ஏறியபின், லிப்ட் மேன் — என்பவரை முதல் மாடியில் ஆபரேஷன் தியேட்டர் எங்கே இருக்கிறது-என்று கேட்டார் கராகா.

அவன் "கேய் நீ!" — என்று திருப்பிக் கேட்டான்.

வந்தவர்களுக்கு ஒன்றும் புரியவில்லை. ஆனுல் கராகா கூட வந்த நர்ஸ் 'கைனேகலாஜிகல்' கேஸா? — என்பதற்குத்தான் அவன் அப்படிக் கேட்டான்' — என்று கராகாவுக்குக் கூறினுள்.

—இது கராகாவுக்கு இரண்டாவது அதிர்ச்சி. மருத்துவ மனையின் விஷயம் புரியாத நபர்களை இப்படி எதையெதையோ சொல்லி மிரட்டும் பண்பைக் கண்டார். தெரியாதவைகளை அன்புடன் திருத்திச் சொல்வார் இல்லையா?—என ஏங்கியபடியே சென்றுர்!

* * *

முதல் மாடிக்குப் போகும் வழியில் ஒரு பெண், சக்கரமுள்ள படுக்கையில் அசையாது படுத்திருந்தாள். அவளை யாரும் சிந்துவாரில்லை. கைகால்களையும் தலையையும் கவனிக்கும்போது ஏதோ ஒரு பிணம்தான் என்று கராகா எண்ணினுராம். இப்படி ஒரு பிணம் யாரும் கவனிப்பாரற்றுக் கிடக்கிறதே என நினைத்தார்; வருந்தினுர். ஆனுல் சிறிது நேரத்தில் அந்தப் 'பிணம்' கண்ணைத் திறந்ததாம்; தலையை அசைத்ததாம்.

கவனிப்பாரற்றுக் கிடக்கும் நிலைகூட உண்டு. நன்றாகக் கவனித்துப் பார்ப்பார்கள் என நாம் நம்பி அனுப்பும் மருத்துவ மனைகளில்—என்பதை மூன்றும் படிப்பினையாகக் கொண்டார் கராகா.

* * *

முதல் மாடியிலுள்ள ஒரு பணியாளர் இவர் கொடுத்த சீட்டை வாங்கிப் பார்த்தார். அதில் உள்ள எழுத்துக்களைப் படிக்கவே முடியவில்லை அவரால்! (டாக்டர்களின் எழுத்துக்கள் தான் அவர்களாலேயே படிக்க முடியாதே!)—இருந்தும் இவர் முயற்சி செய்யவில்லை! அப்போது நர்சுகளின் கூட்டம் வந்தது. அதைப் படிக்க முயற்சித்தனர். அதைப்பற்றி ஒன்றும் கூறுமல் திருப்பித் தந்து விட்டு அவர்களும் போய் விட்டனர்.

— பிறர் புரிந்து கொள்ள வேண்டும் என்றே—பிறர் கூறியிருப்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்றே அக்கரை இல்லாதவர்களைக் கண்டார். நாலாம் படிப்பினை கொண்டார், 'கரண்ட்' ஆசிரியர்.

பிறகு ஒரு நபர் வந்தார். அந்த லட்டரை வாங்கிப் பார்த்தார். பிறகு கராகா, மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட வேண்டியவர் என்றும், அதற்குமுன் இதற்கான கேஸ் பேப்பர்களை எடுக்க வேண்டும் என்றும் கூறிவிட்டு அவரைப் பின் தொடரச் சொன்னு; கராகா குழுவினர் பின் தொடர்ந்தனர்.

அவர் ஒரு சிறு மாடிப் படியில் இறங்கினுர்; இவர்களும் இறங்கினர்!

அவர் ஒரு அறையில் தங்கச் சொன்னுர்கள்; இவர்களும் சிறிது நேரம் பொறுத்துப் பார்த்தனர்.

பிறகு அவர் தன்னைப்பின் தொடரச் சொன்னுர்; இவர்களும் பின் தொடர்ந்தனர்.

இப் பைத்தியக்காரச் செயலைக் கண்ட 'கரண்ட்' பத்திரிகையின் ஆசிரியரும், தற்போதைய நோயாளியுமான கராகா சலிப்படைந்தார். தன்னை அழைத்துக் செல்பவரை நோக்கி 'நீங்கள் யார்? எங்களை எங்கு அழைத்துச் செல்கிறீர்கள்? எதற்கு அழைத்துச் செல்கிறீர்கள்?" — என்று கேட்டார். "நான் உங்களுக்கு சீட்டு எழுதித் தந்த' டாக்டரின் உதவியாளன் உங்களை மருத்துவமனையில் அனுமதிக்க அழைத்துச் செல்கிறேன்"—என்றுர்.

சிறிது நடந்து சென்று பிறகு அங்கொரு இடத்தில் உட்காரச் சொன்னுர்; உட்கார்ந்தார்கள்! இப்போது மருத்துவமனையை ஒரு சுற்று சுற்றி வந்திருக்கிறுர்கள் என்று உணர்ந்தார்கள்!

ஏனென்றுல் முதலில் பார்த்த விசாரணைக் கூடத்திற்கே வந்து விட்டார்கள்!

அந்த விசாரணைக் கூடத்துப் பணியாளர் கேட்டார்: "நீங்கள் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட வேண்டும் என்று விரும்புகிறீர்களா?"

வகுப்பு வேற்றுமை; மருத்துவ விடுதிகளிலுமா இப் 'பேயாட்டம்'?

"இல்லை; டாக்டரை 11 மணிக்குப் பார்க்க வந்தேன்."— என்று கூறிவிட்டு கடிகாரத்தைப் பார்த்தார், கராகா.

மணி பதினொன்று!

நோயாளிகளை இங்குமங்கும் ஒரு பயனும் இல்லாமல் அலைக்கழிக்கும் பழக்கம் சர்வ சாதாரணம் இங்கு என்னும் பாடத்தைக் கற்றுக் கொண்டார்.

* * *

அந் நேரத்தில்டாக்டரின் உதவியாளனுக்கும், விசாரணைக் கூடத்திலிருப்பவருக்கும்சண்டை துவங்கி விட்டது.

"டாக்டரின் உதவியாளன் நான். என்னுடன் அவர்களை அனுப்பு!"

"முடியாது. மருத்துவமனைக்குச் சீட்டு எழுதியிருக்கிறார். எனவே நாங்கள்தான் அனுப்புவோம். உன்னுடன் அனுப்ப முடியாது!"

இப்படி வாதம் வளர்ந்தது; நேரமும் வளர்ந்தது! 'கரண்ட்' ஆசிரியருக்கோ ஆத்திரம் பொங்கிற்று. யாராவது ஒரு முரடனாய் இருந்தால், இப்படி அலைக்கழித்ததற்கு இருவரையும் அடித்து நொறுக்கி நீதியை நிலைநாட்டியிருப்பான்.

இம்மாதிரி இடங்களில் வருவோரின்—ஆத்திரத்தைக் கிளப்பும் பணியாளர்கள் இந்த ஆட்சியில்அதிகம் என்பதை உணர்ந்து கொண்டார் ஆசிரியர் !

* * *

சண்டை ஓய்ந்த பின் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட வேண்டியவராக மாறிய ஆசிரியர் கராகா ஆட்களைச் சேர்க்கும் பகுதிக்கு அனுப்பப்பட்டார். அங்கு உள்ள பணியாளர் 'உங்களுக்கு எந்த வகுப்பு வேண்டும்? இரண்டாம் வகுப்பா?'—என்று கேட்டார்.

ஆசிரியர் திகைத்தார்! ஏழைகளின் மருத்துவமனை என்று பெயரெடுத்திருக்கும் இந்த மருத்துவமனையில், இரயில் வண்டிகளில் உள்ளதைப் போன்ற வகுப்புகளா எனத் திகைத்தார்!

இருந்தும், 'இரண்டாம் வகுப்பு'—என்றார்!

இரண்டாம் வகுப்பு என்றால் இரண்டு படுக்கைகளும் மற்ற நல்ல வசதிகளும் உள்ளன அதற்காகக் கட்ட வேண்டிய முன் பணம் எவ்வளவு என்றும் தெரிவித்தார் அந்தப் பணியாளர்.

ரூபாய் முன்னூறு!

அதுவும் ஒருநாள் தங்குவதற்கு!

"அவ்வளவு பணமில்லையே என்னிடம் 40 ரூபாய்தானே இருக்கிறது!"—என்றார் ஆசிரியர்.

ஏழைகளின் மருத்துவமனை என்று பெயர் படைத்த அந்த மருத்துவமனையில் ஒருநாள் தங்குவதற்கு முன் பணம் முன்னூறு கட்டவேண்டும் — என்று உணர்ந்த அவர் ஏழைகளுக்கு உலகமில்லை எனும் ஏழாவது படிப்பினையைப் படித்துக் கொண்டார்.

* * *

நோயாளிகளைச் சேர்க்கும் பகுதியைச் சார்ந்த அவர், இன்னொருவரிடம் கூறினார்.

"என்ன பணமில்லை என்கிறாரே? டாக்டர் பொறுப்பெடுத்துக் கொண்டால்தான் நான் 'இந்த மனித'ரை மருத்துவமனையில் சேர்த்துக்கொள்ளப் போகிறேன்"—என்றார்.

அவர் தன்னை 'இந்த மனிதர்' என்று குறிப்பிட்டதும் கராகாவுக்கு ஒரு அதிர்ச்சி ஏற்பட்டது, சிந்தனையில்! இதுவரை அவரை,

(1) யார் நீங்கள்?

(2) உங்கள் பெயரென்ன?

(3) கூட்டமாக வந்திருக்கும் உங்களுள் யார் நோயாளி?

—என்றெல்லாம் கேட்கவே இல்லையாம்! ஏதோ மனிதர்களாக மட்டும் நினைத்திருக்கிறார்கள்!

—'யார் எதற்கு வந்திருக்கிறார்கள்' — என்று தெரியாமலேயே பெரிய மருத்துவமனைகள் அரசாங்கத்தின் பெயரால் நடப்பது கண்டு மற்றொரு படிப்பினையைக் கற்றுக் கொண்டார்.

* * *

டாக்டரின் உதவியாளர்— என்று கூறியவர், நோயாளியை அனுமதிக்கப்படாதபாடுபட்டு அங்குமிங்கும் அலைக்கழித்த அவரும் ஒரு டாக்டர்—அவுஸ் டாக்டர் எனப் பின்னர் தெரிந்து கொண்டார் ஆசிரியர்!

முன்பணமில்லாததால் அவர்கள் டாக்டரின் வருகைக்குக் காத்திருந்தார்கள். ஒருவரும் அவர்களை உட்காரச் சொல்லவில்லை; ஆம் — நெடுநேரம் நிற்கும் பெண்களைக்கூட யாரும் கவனிக்கவில்லை.

பிறகு டாக்டர் வந்தார். ஆபரேஷன் தியேட்டருக்குள் அழைத்துச் சென்றார். அப்போதுதான அவர் பெயரை குறித்துக் கொண்டனர். அவர் சிகிச்சை முடிந்து அன்று மாலை 5-30-க்கு வெளியே அனுப்பப்பட்டார்.

அப்போது கராகாவுக்கு ஒரு 'பில்' வந்தது. அது வெறும் 'பில்!'—கூடவே வந்த அவுஸ் டாக்டர் கராகாவிடம் இருக்கும் ரூபாயை அனுசரித்து 40 ரூபாயை அந்த பில்லில் போட்டார்!

பிறகு அதைக் கட்ட, 'கேஷ் டிபார்ட்மெண்ட்' எனும் இடத்திற்குச் சென்றார். அங்குள்ளவர் 'இப்போது நேரமாகிவிட்டது; கட்டணம் வாங்கிக்கொள்ள மாட்டோம்!'—என்றார்!

பிறகு 'நோயாளிகளைச் சேர்க்கும் இடத்திற்கு'ச் சென்று பணம் பின்னர் அனுப்புவதாகக்கூறி கராகா தன் முகவரியைத் தந்துவிட்டு வீடு திரும்பினார்.

—இப்படிப் பல்வேறு படிப்பினைகளைத் தெரிந்து கொண்டார் அவர்.

படித்தவர்களையும், பத்திரிகையாசிரியர்களையுமே ஆட்டிப் படைக்கும் இந்த மருத்துவ நிலயங்கள் ஏழை மக்களை—நடுத்தர மக்களை என்ன பாடு படுத்தும்?

—இம்மாதிரி 'மிக மோசமான மருத்துவமனைகள்' ஏதோ பம்பாயில் மட்டுமில்லை! நம்மூர்களிலேயே இருக்கின்றன!

எண்பதாயிரம் மக்கள் கொண்ட ஊருக்கு ஐம்பது படுக்கைகள் கொண்ட ஊர்கள்!

ஏழைகள் என்றாலே அடி—முதல் முடிவரை அலட்சியம் காட்டும் பொது மருத்துவமனைகள் (ஜெனரல் ஆஸ்பத்திரிகள்!)

ஆபரேஷன் செய்யச் செய்ய 'வலிப்பு வந்து' இறக்குமளவுக்குத் தொழிலில் அலட்சியம் காட்டுவோர்—

காலையில் மருத்துவமனையைத் திறக்கும்போது சட்டத்தை மறந்து விட்டு, மாலையில் மருத்துவமனையை மூடும்போது மாத்திரம் சட்டத்தின் பகுதிகளை எடுத்துக் காட்டுவோர் ஏராளம்! ஏராளம்!

இந்தக் குறைகள் அகல வேண்டும்; இத்தகைய நடைமுறை மாறவேண்டும்!—இதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும்! இல்லையென்றால் துன்பத் தூக்கத்தில் புரளும் மக்கள் விழித்துக் கொள்வார்கள்; பிறகு இந்த இழிநிலைகளுக்குக் காரணமானோர் தப்ப முடியாது!

சிரித்தமுக வடிவேலர்களே! எரித்துக்கொள்க முகத்தை!

முன்பு

"எம். எல். ஏ. ஆகிவிட்டால் போதுமா? பேசத்தெரிய வேண்டுமே. யுக்தியானுச்சாரமாக நடக்கத்தெரிய வேண்டாமா? இவர்களுக்கெங்கே தெரியப்போகிறது. மாலை அருமை அவர்களுக்குத் தெரியுமா? ஹி....ஹி....ஹி!"

— இது தி. மு. க.—க்கள் பற்றிய மந்திரிகள் பேச்சு!

"தெரியாதவைகளைத் தெரிந்துகொள்ளும் ஆவல் உண்டு. வழிநடத்த ஓர் அறிஞர் உண்டு. மலரைப் பின்னப்படுத்துவோரிடமிருந்து வாங்கி அதைப் பத்திரமாக வைத்துக்கொள்ளும் ஆற்றலும் இருக்கிறது. ஆற்றின் இழுப்பு மேலோட்டத்தில் தெரியாது!"

— இது நம் மறுமொழி!

"தி. மு. க. உறுப்பினர்கள் வெகு அருமையாக நடந்து கொள்கிறார்கள் சட்டசபையில்! குறிப்பிட்ட அளவே பேசி சபையின் கண்ணியத்தைக் காப்பாற்றுகிறார்கள்!"

— இது செய்தி. காங்கிரசாரின் முகத்தில் ஈயாடா நிலைக்குக் கொண்டுவந்த சட்டசபைச் செய்தி!

★ ★ ★

இப்போது

"இந்த தி. மு. க. களுக்குப் பொருளாதாரம் தெரியுமென்று நினைத்தோம். கடைசியில் மாமிசக் கடை வைக்கச் சொல்கிறார்களே! கறி ஏற்றுமதியாகி நமக்குக் காசு கிடைக்கப் போகிறதாம்? ஹி....ஹி...ஹி!"

—இது மந்திரிகள் கேலிக் குரல்!

"கறி ஏற்றுமதி செய்தே உயிர் வாழும் எத்தனையோ நாடுகள் இருக்கின்றனவே. அது தெரியாதா உங்களுக்கு? மாடு தரும் பாலைக்காய்ச்சி பவுடராக்கி அனுப்பியே காலம் தள்ளும் நாடுகளைப் பற்றிக் கேட்டதில்லையா நீங்கள்?"

—இது நம்மவர் பதில்!

"பெரிய திட்டங்கள் போடுகிறோம். இலட்சக்கணக்கில் சம்பாதிக்கப் போகிறோம். ஒன்றரையணா இரண்டரையணா வியாபாரத்தையெல்லாம் கூறிக்கொண்டு! பனி பெய்து குளம் நிரம்புமா?—ஹி...ஹி....ஹி!"

—இது மந்திரிகளின் ஏகடியப் பேச்சு!

"இதுவரை பெரிய திட்டங்கள் போட்டீர்களே. என்ன பலன்? எத்தனை சம்பாதித்தீர்கள். நீங்கள் எதிர்பார்த்ததை விட அதிகத் தோல்விதானே கண்டீர்கள்? சிறு வியாபாரம் என்றாலும் ஏளனம் செய்யாதீர்கள். சிறுதுளியும் பெரு வெள்ளம் ஆகும்!"

—இது நம்முடைய அடக்கமான பதில்!

"மாம்பழம் விற்றதால் நமக்கு வந்த அந்நிய செலாவணி 7 லட்சம் ரூபாய். முப்பத்தேழு நாடுகளுக்கு விற்றதாலேயே கிடைத்த ரூபாயாகும்!"

—இது செய்தி; சிறுதுளி பெரு வெள்ளம் ஆகும் என்பதற்கோர் உதாரணம். நல்ல பொருளாதாரக் கண்ணோட்டம் உடையவர்கள் நாம்—என்பதற்கோர் அத்தாட்சி!

"இப்போது எங்கே அந்த...ஹிஹிஹி"—க்கள்!

★ செப்டம்பர் 15! ★

திராவிடத்தின் 'நீடுதுயில் நீக்கப் பாடி வந்த நிலா — காடு கமழும் கற்பூரச் சொற்கோ — கவிழ்க்கும் பகையைக் கவிழ்க்கும் போர்முரசு— அறனும் அன்பும் ஆட்சி செலுத்தும் பகுத்தறிவுப் பேரொளி!

எங்கள் அண்ணா

50-ம் ஆண்டு பொன்விழா மலர்

முரசொலி வெளியிடும் இம்மலரில் அண்ணாபற்றி

★ உலகப்பார்வையைத் தம் பக்கம் இழுத்த அரசியல் தலைவர்கள்-

★ இந்தத் துணைக்கண்டத்தின் புகழாரம் பூண்டவர்கள்-

★ அறிவியற் பேரறிஞர்கள்-

★ உயர்தனிச் செம்மொழியாம் தமிழின் காவலர்கள்-

இன்னும் எண்ணற்றோர் எழுதுகிறார்கள்!

★ கண்ணைக் கவரும், புன்னகை தரும், மூவண்ண முகப்பு அட்டையிலே தென்னகத்து மண்ணின் காவலன் அறிஞர் அண்ணா வெண் புறுக்களுடன் வீற்றிருக்கும் காட்சி!

★ திருப்பிய பக்கமெல்லாம், பொன்னையும் மணியையும் உருக்கி வார்த்ததே போன்ற வண்ணப் படங்கள்.

★ எழுத்துக்கு எழுத்து தேன் சொட்டும் கட்டுரைகள்.

★ அறிஞர் அண்ணா படைத்த (கதைப்) பாத்திரங்கள் பற்றிய விமர்சனக் கட்டுரைகள்!

❊ அண்ணாவின் உள்ளம்—விண்மீன்கள் திரிகின்ற வானப் பரப்பு!

❊ அவருடைய அறிவு—ஆழம் காண முடியாத மாபெருங் கடல்!

❊ அவருடைய நகைச்சுவை — விலா எலும்புக்கு வேதனை, விவேகத்திற்கு வேலை!

—இவைகளை விளக்கும் அறிஞர் அண்ணாவின் வாழ்க்கை நிகழ்ச்சிகளிலிருந்து எடுத்துக் கோத்த சுவையான துணுக்குகள்.

செப்டம்பர் 15-ல் கிடைக்கும், செந்தமிழ்ப் பூங்கொத்து! கையிருப்பில் இருக்க வேண்டிய கருத்துக் கருவூலம்!

விலை ரூபாய் ஒன்றுதான்!

இப்போதே விற்பனையாளர்களிடம் உங்கள் பெயரைப் பதிவு செய்து கொள்ளுங்கள்!

தலைமைக் கழக அறிக்கை: 9-59

தி. மு. கழக 10-வது ஆண்டு நிறைவு விழாவும், திராவிடநாடு விடுதலை வாரமும்

❊

17—9—59—ஆம் நாளிலிருந்து 23—9—59—ஆம் நாள் வரை

கொண்டாட வேண்டுகோள்

பொதுச்செயலாளர் அறிக்கை

❊

17—9—59—ஆம் நாளில் திராவிட முன்னேற்றக் கழகம் பத்தாண்டு நிறைவு பெற்றுப் பதினோராவது ஆண்டில் அடியெடுத்து வைக்கிறது.

இந்த நிகழ்ச்சி கழக வரலாற்றில் குறிப்பிடத்தக்கதொரு சீரிய வரலாற்று நிகழ்ச்சியாகும் என்பதோடு மட்டுமல்லாமல், பூரிப்போடும்பெருமையோடும் கொண்டாடத்தக்கதொரு பெருவிழா நிகழ்ச்சியுமாகும்.

கடமை — கண்ணியம் — கட்டுப்பாடு என்னும் பண்புகளைத் துணையாகக்கொண்டு. பொலிவோடும் வலிவோடும், பெயரோடும், புகழோடும், அருமையாகவும், பெருமையாகவும் வளர்ந்துவரும் திராவிட முன்னேற்றக் கழகம் பத்து ஆண்டு நிறைவு பெறுகிறது என்னும் செய்தி கழகத் தோழர்களையும், கழக ஆதரவாளர்களையும், கழக வளர்ச்சியில் அக்கரை கொண்டுள்ள பொதுமக்களையும் உளங் குளிர வைக்கும் நற்செய்தியாகும்.

தி. மு. கழகப் பத்தாவது ஆண்டு நிறைவு விழாவை இதற்கு முன் நடைபெற்ற நிறைவு விழாக்களைவிட எழிலும் ஏற்றமும் பொங்கும் வகையில், ஏற்றமுறைகளிலெல்லாம் கொண்டாடுமாறு கிளைக் கழகங்களையும், கழகத் தோழர்களையும், ஆதரவாளர்களையும் கேட்டுக்கொள்கிறோம்.

பத்தாவது ஆண்டு நிறைவு விழாவை ஒட்டிய ஏழு நாட்களை அதாவது 17—9—59-ம் நாளிலிருந்து 23—9—50-ம் நாள் முடிய உள்ள ஒரு வார காலத்தை வழக்கம்போல் திராவிட நாடு விடுதலை வாரமாகக் கொண்டாடுமாறும் கேட்டுக் கொள்கிறோம்.

கழகத்தின் வரலாற்றை எடுத்துரைத்தல், கொள்கைகளையும் நோக்கங்களையும் தெளிவாக்கிக் காட்டுதல், அரிய செயற்பாடுகளைச் சுட்டிக் காட்டுதல், செயல் முறைத் திட்டங்களை விளக்கிக் காட்டுதல், கழக வளர்ச்சிக்கான வழிவகைகளைக் கோலுதல் போன்ற சீரிய முயற்சிகளில் ஈடுபடுமாறு அனைவரையும் வேண்டிக் கேட்டுக் கொள்கிறோம்.

பொது அமைதிக்கு ஊறு நேரிடாதவகையில் கொடியேற்று விழாக்கள் நடத்துதல் பொதுக் கூட்டங்கள் கூட்டுதல், ஊர்வலங்கள் நடத்துதல், கலை நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்தல், கொள்கை விளக்க ஏடுகள் வெளியிடுதல், துண்டு அறிக்கைகள் பரப்புதல் போன்ற பல்வேறுவகையாலும் விழாவைச் சிறப்புறக் கொண்டாடுமாறு அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இரா. நெடுஞ்செழியன்

பொதுச்செயலாளர், தி.மு.க.
'அறிவகம்' சென்னை—13.
1—9—1959.

மு. கருணாநிதி சுற்றுப்பயணம்

❊

12—பூவிருந்தவல்லி மாநாடு

13—திருவாரூர்—திருமணம்

16—காலை லால்குடி—திருமணம் மாலை—திருச்சி

17—சென்னை

19—தஞ்சை நாடகத் தலைமை, —கூட்டம்

20—மதுரை—கூட்டம்.

21—பெரியகுளம், பேரையூர்.

விற்பனையாகிறது!

வீழ்ந்து விட்ட தமிழகமே; எழுந்து நில்!

ஆசிரியர்: **தஞ்சை புலிக்கொடியான்**

விலை 50 காசுகள்

வீரத்தின் வழிவந்த வித்தகரே! தென்றல் தவழ் சோலையிலே தெம்மாங்கு பாடிய நாம்; அழுதழுது வாடிய மலராகத்தான் வாழவேண்டுமா? செந்தமிழ் வீரர்களே தமிழன்னையின் துயர் துடைக்க வாரீர்! —எனத் தேன் தமிழில் அழைக்கின்றார் ஆசிரியர்.

விவரங்கட்கு:

தமிழகம்:
முருகன் புத்தக நிலையம்,
202, தம்பு செட்டித் தெரு,
சென்னை—1.

மலேயா:
இராயல் புத்தக நிலையம்,
635 ஏ, நார்த்பிரிட்ஜ் ரோடு,
சிங்கப்பூர்—7.

ஆசிரியரும், அச்சிடுபவரும், வெளியிடுபவரும், மு. கருணாநிதி, 'முரசொலி' அச்சகம், 4—128, மவுண்ட்ரோடு, சென்னை—6. தமிழ்நாடு.